

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம், உயர்கல்வித் துறை சார்பாக, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், நெசவாளர் தெரு, அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியை திறந்து வைத்தார்கள். அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று (05.08.2016) குத்து விளக்கேற்றினார்.

செ.வெ.எண்: 494/2016 நாள்: 05.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம்,
உயர்கல்வித் துறை சார்பாக,
கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், வடசேரி நெசவாளர் தெருவில் உள்ள
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை
இன்று (05.08.2016) திறந்து வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவியர்களின் கல்வியை உயர செய்வதற்காக பள்ளி கல்வித்துறை மற்றும் உயர் கல்வித்துறை சார்பாக, பல்வேறு நலத்திட்ட உதவிகள், கல்வி உபகாரணங்கள் வழங்கி வருகிறார்கள். மேலும் நமது மாவட்டத்திலிருந்து மாணவ, மாணவியர்கள் திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டத்திற்கு சென்று உயர்கல்வி கற்கும் சூழ்நிலை இருந்து வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதனை கருத்தில்கொண்டு, கோணத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரூ. 7.25 கோடி செலவில் கட்டிட உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் முடிவடையும் வரையில், மாணவ, மாணவியர்களின் கல்விக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தில் நெசவாளர் தெருவில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி நடத்திட ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி, 2016-17-ம் கல்வியாண்டில், முதலாமாண்டு இளநிலை பட்ட வகுப்புகளில் மாணவ, மாணவியர்கள் சேர்ப்பதற்காக, 300 விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டு, இளங்கலை பொருளியல் வகுப்புக்கு (B.A. Economics) 64 மாணவ, மாணவியர்களும், இளங்கலை ஆங்கிலம் வகுப்புக்கு (B.A English) 64 மாணவ, மாணவியர்களும், இளங்கலை வணிகவியல் வகுப்புக்கு (B.Com) 64 மாணவ, மாணவியர்களும் என மொத்தம் மூன்று பாடப்பிரிவில் 192 மாணவ, மாணவியர்கள் சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம், உயர்கல்வித் துறை சார்பாக, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், வடசேரி, நெசவாளர் தெருவில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை இன்று (05.08.2016) திறந்து வைத்தார்கள்.

அதனை தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று (05.08.2016) குத்து விளக்கேற்றி வைத்து, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் திரு. ஜஸ்டின் செல்வராஜ், மாவட்ட பால்வளத்தலைவர் திரு. எஸ்.ஏ.அசோகன், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய பெருந்தலைவர் திரு. பகவதிபெருமாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. நாஞ்சில் ஏ. முருகேசன், திரு. ராஜன், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகர், திரு. நாஞ்சில் சந்திரன், திரு.கனகராஜ், திரு. என்.என். ஸ்ரீஜயப்பன், கல்லூரி முதல்வர் திரு. இராமச்சந்திரன் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.